புதினப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்றது.

(1889)

# இந்துசாதனம்.

# THE HINDU ORGAN.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

**பத்திரக் கிரயம்.**

| | |
|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம்: வரு 1-க்கு ரூ | 5-60 |
| வெளியூர், இந்தியா: " ரூ. | 9-40 |
| தொலைவாய்ப்பகுதி: " ரூ. | 9.40 |
| தனிப்பிரதி: | சதம் 6 |

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

**விளம்பர விகிதம்.**

| | | |
|---|---|---|
| முதன்முறைக்கு:— | ஒருகலம் | ரூ. 9-40 |
| " | அரைக்கலம் | ரூ. 5-00 |
| " | கால்கலம் | ரூ. 3-15 |
| " | ஒரு அங்குலம் | சதம் 65 |

அடுத்த முறைகட்கு டி விகிதங்களிற் பாதி விளம்பரங்கள் முற்பண மனுப்பினலன்றிக் கவனிக்கப்படா

புத்தகம்—ரு௲. } யாழ்ப்பாணம்:—விபவ௵ சித்திரை௴ உ௰௨; (1928 மே௴ 3) வியாழக்கிழமை. { இலக்கம்—அ௨.

உ

கணபதி துணை.

சீர்பூத்த கருவிதூ லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க வோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானுர்தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென்றோது
மதம்பூத்தவிநாயகன்றள்வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்க்கவே.

## சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகநன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொது ஜன நலத்தைக்கருதியே இப்போதுஇந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பீதாறு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தாஸ, சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பூ வங்கபஸ்பம், அப்ரகபஸ்பம், பவளப்பஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம் சாம்பிராணிப் பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது.

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம் பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல் வலி, இடுப்புவலி, பக்க வாய்வு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற் சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதக வாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் நீர்த்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ரூத்தல் ஒன்றுக்கு ரூபா ௨0. அரைரூத்தலுக்கு ரூபா ௧0. கால் ரூத்தலுக்கு ரூபா ௫. தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினங்கு முதலிய தொடுவாயிராச்சியப்பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததினல் முன்மனி ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவநானஆரோக்கியசுகாதாரவைத்தியசாலை
காத்தான்குடி போஸ்டு,
மட்டக்களப்பு,
சிலோன்.

(M. 36.)

## கௌரவ லேர் பொன் இராமநாதனவர்கள் இயற்றிய நூல்கள்.

1. செந்தமிழ் இலக்கணம் முதற்பாகம் (எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும்) நன்னூற் சூத்திரங்களைத் தழுவி இலகுவான உரை நடையில் இயற்றப்பெற்றது. 545 பக்கங்கள் கொண்டது. உயர்ந்த பதிப்பு ரூபா 3-00. சாதாரண பதிப்பு ரூபா 2 அணு 8.
2. பகவத்கீதா — தமிழ் மொழிபெயர்ப்பும் விருத்தியுரையும் 517 பக்கங்கள் கொண்டது ரூபா 2-00.
3. திருக்குறள் பாயிரமும் இராமநாதீயம் என்ற விருத்தியுரையும் 143 பக்கங்கள் கொண்டது ரூபா 1-00.

மானேஜர்,
இராமநாதன் கல்லூரிப் புத்தகசாலை,
சுன்னுகம், யாழ்ப்பாணம்.

(H. 64)

## ஜாதக விளம்பரம்.

ஜாதகபலன் அறியவிரும்புவோர் ஜாதகக் குறிப்பையாவது, அல்லது பிறந்த வருஷம், மாதம், திகதி, கிழமை, நேரம், ஆண், பெண், பிறந்த ஊர் இவைகளைத் தெளிவாக எழுதி அனுப்பித் தற்கால பலன் அறிய ரூபா 1—00

ஜாதகக் குறிப்புக்கள் ரூபா 1, 2, 7, வரையிலும், ஜாதகங்கள் 10 ரூபாய் முதல் 150 ரூபா வரையிலும் எழுதிக்கொடுக்கப்படும்.

ஆருடம் ஞாயிறு வியாழக்கிழமைகளில் சொல்வோம். கடித மூலமாய் அறிய விரும்புவோர் கடிதம் எழுதும் நேரத்தைக் குறிப்பிட்டு எழுதவும். மூன்றுகேள்விகளுக்குட்பட ரூபா 1. மேற்பட்ட ஒவ்வொருகேள்விக்கும் சதம் 25 (அணு 4.)

மற்றும் விபரங்கள் கடித மூலமாயறிந்து கொள்ளலாம். பதில் வேண்டுவோர் முத்திரை (ஸ்டாம்பு) அனுப்புதல் வேண்டும்.

விலாசம்:—
க. கனகசபை.
சோதிடர்,
அன்னசத்திரத்தடி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(Q. 101.)

## திருவாலங்காட்டுத் தேர்த் திருப்பணி.

—:O:—

மூர்த்தி தலம் தீர்த்தம் வாய்ந்ததும், பஞ்ச சபைகளுள்ளே ரத்தினசபையை உடையதும், சமயகுரவர், காரைக் காலம்மை, அருணகிரிநாதர், பட்டணத் தடிகள் முதலிய மகான்களின் பாடல் பெற்றதும ஆகிய திருவாலங்காடென்னும் வடாரணிய க்ஷேத்திரத்திலே நெடுநாள் ரதமின்றி யிருந்தமையால், திருவருளை முன்னிட்டு ஓர் ரதத்தை நூதனமாயமைக்க ஆரம்பித்து இலங்கைவாசிகள் உபகரித்த பணத்தைக்கொண்டு அத்தேசத்திலுள்ள அருமையான மரங்களும் சீமை இருசு (அச்சு) களுந் தருவித்து, இதற்கென அமைக்கப்பெற்ற தகரக் கொட்டகையிலே, பிரபவ௵ கார்த்திகை௴ ௧௬௨ நிகழ்ந்த சுபதினத்திலே முகூர்த்தஞ்செய்து இதுவரை சதுரப்பட்டடை மட்டம் வேலை நிறைவேறிவருகிறது. இத்திருப்பணி நன்கு பூர்த்தியாக இன்னும் நாற்பதினாயிரம் ரூபா வரையில் வேண்டியதாயிருப்பதால் சிவநேயச் செல்வர்களனைவரும் தங்கள் தங்களாலியன்ற பொருளுதவி இத்திருப்பணியை இனிது முற்றுவித்து வடாரண்யேஸ்வரப்பெருமானாது திருவருளைப்பெறும்வண்ணம் வேண்டுகிறோம்.

இங்ஙனம்,
சச்சிதானந்தராஜயோகி,
(T S W Y.Swamy.)

திருவாலங்காடு (போஸ்ற்)
விபவ௵சித்திரை௴ ௧௨

(Q 102)

## பரராச சேகரம்.

எனப்படும் அரிய பெரிய வைத்திய நூல் சஞ்சிகை வடிவமாக வெளியிடப் படுகின்றது. ஆண்டுக் கையொப்பம் ரூபா 4—00. வேண்டுவோர் அடியிற் கண்ட விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்க.

அ. பொன்னையா,
வைத்தியர்,
ஏழாலை.

(M. 61) Chunnakam Post.

## வெற்றிலை! வெற்றிலை!! வெற்றிலை!!!

வியாபாரிகளே! உங்களுக்கு வெற்றிலை தேவையானல் கீழ்க்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதுங்கள். இலங்கையிலுள்ள மிகவுந் திறமான வெற்றிலை இங்கே மிக மலிவான விலைக்குக் கிடைக்கும். எந்தத் தினிசான வெற்றிலையும் இலங்கையிலுள்ள எந்த இடங்களுக்கும் புகைரதமூலமாக எப்பொழுதும் அனுப்பலாம். விசேஷமாகக் கலியாணவீடு மற்றும் கொண்டாட்ட தினங்கள் முதலியவற்றிற்கு வெற்றிலை அனுப்புவதற்கு எப்பொழுதும் ஆயத்தமாக விருக்கிறோம். சென்ற 36 வருஷங்களாக இலங்கையிலுள்ள பல பாகங்களிலும் மிகவும் திருப்திகரமான வியாபாரஞ் செய்திருக்கிறோம்.

எமது விலாசத்திற்கு ஒரு தந்தி மணி ஓடர் சமீபமான புகைரதஸ்தானத்தைக் குறிப்பிட்டனுப்பினல் அடுத்த புகைரத மூலமாகவே வெற்றிலை யனுப்புவோம். அயலூர்களுக்கே எந்தக்காலமும் நாங்கள் வெற்றிலை அனுப்பிப் பெரிய வியாபாரஞ் செய்துவருகிறோம். ஒருமுறை எங்களிடத்தில் நீங்கள் வெற்றிலை வாங்கினல் பின் வேறேரிடத்திலும் வாங்க மாட்டீர்கள். இது திண்ணம்! எங்கள் தந்திவிலாசம் ஆக இரண்டு சொற்களே யுடையன.

மற்றும் விபரங்களுக்கு எழுதவும்.

S. P. A. மகிறிஸ் அப்புகாமி,
கம்பகா.

S. P. A. Magiris Appuhamy,
Gampaha - W. P

தந்தி விலாசம்:—
மகிறிஸப்புகாமி,
கம்பகா.

Tel. Add:—"Magrisappuhamy",

(H. 62) Gampaha.

## வியாபாரத்தில் விர்த்தியடைய விருப்பமா?

இந்தப் புத்தகத்தை வாசியுங்கள்.

ஒவ்வொரு வியாபாரியும் தொழிற்சாலை அதிபரும் முதலாளியும் தங்கள் தங்களுக்கு உகந்தபடி விளம்பரவழியைத் தேடிக் கொள்ளவும், அதின்படி சுருக்கமான செலவில் சிறந்த விளம்பர சகாயத்தைப் பெற்று வியாபார விர்த்தியை யடையவுந் துணையான நூல்.

## வியாபார விர்த்தி விளம்பர யுக்தி.

தமிழில்முதற்பதிப்பு விலைரூபா 1 தபாற்கூலி அணு 4 முற்பணம்அனுப்புக.

தமிழில் இதுவரை வெளிவராத அரிய நூதன விளம்பர விஷயங்களைத் தாங்கிவரும். நவீன விளம்பர வித்தை விற்பன்னர் ஒருவரால் இனிய எளிய தமிழில் எழுதப்பட்டது. 6¾×4¼ அங்குல அளவுள்ள 200 பக்கங்கள். அழுத்தமான காகிதப் பதிப்பு வைகாசி மாதம் வெளிவரும்.

Modern Publicity Company.
மாடர்ன் பப்ளிசிடி கம்பெனி,
15 அரண்மனைக்காரத்தெரு,
சென்னபட்டினம்.

(Q. E. X.)

## தங்கப்பவுண் அடையாள மிடப்பட்ட கொளுக்கிஓடுகள்.

இலங்கையில் இதுவே திறமான ஓடாக மதிக்கப்பட்டுவருகிறது. இது மிக உரமானது; நீடித்திருக்கத்தக்கது; அழகானது; எல்லாரும் இதனையே விரும்புகிறார்கள்.

காரணம்:

இந்தச்சாதி ஓடுகளின் விசேஷம் அநுபவத்திற் கண்டது. இந்த ஓட்டை நாங்கள் இங்கே தருவித்தபின் இதனை எல்லாரும் வாங்கி உபயோகிக்கின்றனர். ஒருமுறை வாங்கி உபயோகித்துப் பாருங்கள். ஓடுகளை யாழ்ப்பாணம் பெரிய கடையிலுள்ள எங்கள் பண்டசாலையிலும், பருத்தித்துறையிலுள்ள எங்கள் பண்டசாலையிலும் பெற்றுக்கொள்ளலாம்.

S. வீரகத்திப்பிள்ளை,
தொண்டமானறு.

(Q. 100)

## சமய சந்தேகம் ஏன்?

இந்தியாவிலும் மற்றுங் கீழைத்தேசங்களிலுமுள்ள அநேகர் உபாதைப்படுகின்றார்கள்.

ஏனெனில் அநேகமான மருந்துகளில் மிருகக்கொழுப்புச் சேர்த்திருப்பதால் அவர்கள் அதைப் பயங்கரத்தோடு வெறுக்கின்றார்கள்.

மிருகக்கொழுப்புச் சிறிதுஞ் சேராத

# லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம்

என்னும் மருந்தினால் உண்மையான சுகத்தை யடையலாம். இந்துக்களாயினுஞ்சரி மகமதியர்களாயினுஞ்சரி கிறீஸ்தவர்களாயினுஞ்சரி புத்தர்களாயினுஞ்சரி எல்லோரும் நம்பிக்கையோடு உபயோகிக்கலாம்.

எவ்வித வலிப்பையும் நோவையுந் தீர்ப்பதற்கு இந்தியாவில்லைகண்ட மருந்து.

எல்லாரசாயனசாலைகளிலும் மருந்துக்கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

(Y. 51.)

இந்துசாதனம்.

யாழ்ப்பாணம் விபவஞு
சித்திரைமீ" உகஉ வியாழக்கிழமை.

## பெண் வைத்தியர்களை நியமித்தல் வேண்டும்.

பிருத்தானிய அரசினர் ஏறக்குறைய 150 வருட காலமாக இந்த யாழ்ப்பாணத்தைப் பரிபாலித்து வருகின்றனரேனும், அவர்கள் தமிழ்ப் பெண்களை மரியாதையாக நடத்திக்கொள்ள இன்னமும் பயின்றுகொள்ளாமை பெரும் மனவருத்தமான காரியம். இந்த யாழ்ப்பாணத்திலே பெண்கள் பிரசவகாலங்களிலும் மற்றும் சுகவீனமான சமயங்களிலும் போய்த் தங்கி வைத்தியஞ் செய்தற்காகிய பெண் வைத்தியர்களைக் கொண்ட ஒரு வைத்தியசாலை இற்றைவரையில் அரசினர்பொறுப்பில் இல்லையாம். இணுவிலிலுள்ள வைத்தியசாலை அமெரிக்க பாதிரிமாரால் வைத்து நடத்தப்படுவது. சென்ற பத்திரிகையில் யாம் எடுத்துக் காட்டியபிரகாரம் இந்தியாப் பிரயாணஞ்செய்து மீண்டு வரும் பெண்கள் யௌவனத்தோடு கூடியவர்களாயிருந்தாலும் அவர்களைச் சோதிப்பதற்கு ஒரு பெண்வைத்தியரை நியமித்தலின்றி, அரசினர் ஆடவரையே நியமித்திருக்கின்றார்கள். இவைகளெல்லாவற்றையுங் காட்டிலும் பெருங்குறை என்னவென்றால் யாராயினும் பெண்கள் தற்கொலை முதலியன செய்தகாலத்தும் அவமிருத்தாக இறந்தகாலத்தும் அவர்களுடைய பிரேதங்களைக் கீறிக் கிழித்து வெட்டிச் சோதிப்பதற்குக் காருண்ணியந் தங்கிய சீர்திருத்திய நமது அரசினர் ஆடவர்களாகிய டக்டர்மாரையே நியமித்திருக்கின்றார்கள். தமிழ்ச் சாதியினராகிய நம்மனோர்க்கு அரசினர் செய்யக்கூடிய வசையான செயல் இதிலும்பார்க்க மோசமானது வேறு எதுவுமில்லையெனலாம். ஆனால் இந்த விஷயமாக நாம் அரசினரை முழுவதுங் குறைகூற முடியாது; அரசினர் தம்வகுப்பினராகிய அயிரோப்பிய பெண்களைப்போல் தமிழ்ப்பெண்களையும் மதித்திருத்தலினாலேயே இங்ஙனஞ் செய்து வருகின்றனர். இஸ்லாம் பெண்கள் விஷயத்தில் இஸ்லாமானவர்களுடைய கேள்விகளுக்கெல்லாம் அரசினர் இசைந்து தக்க வசதிகளை அப்பாலார்க்குச் செய்து வருகின்றார்கள்.

பட்டின எல்லைக்குள் ஒரு வீட்டில் மரணம் நிகழ்ந்துவிட்டால் அந்தப் பிரேதத்தைப் பரிசோதித்துத் தகனஞ்செய்தற்கோ அடக்கஞ்செய்தற்கோ அநுமதி கொடுக்கும் உத்தியோகத்தராகவும் இறப்புப் பிறப்புப் பதிபவராகவும் ஒரு ஆடவனையே அரசினர் நியமித்திருந்தனர். ஆனால் இங்குள்ள இஸ்லாமானவர்கள் ஒருங்குசேர்ந்து, ஆடவரான வைத்தியர் தங்கள் வீடுகள்தோறும் வந்து பிரேதசோதனை செய்தல் தங்களுக்கு உடன்பாடல்லவென்றும், பெண் உத்தியோகத்தரையே நியமித்தல் வேண்டுமென்றுங் கேட்க அரசினர் அதற்கு உடன்பட்டு ஒரு பறங்கிப்பெண்ணையே நியமித்திருக்கின்றனர்.

சென்றமாதம் சென்னையில் அண்டர்சன் வீதியில் பெரும் அன்னதானம் முதலாந் தானங்கள் நடந்தபோது சனநெருக்கத்தினால் பலர் நெருக்குண்டு கீழே வீழ்ந்து காயமுற, 9 இஸ்லாம் பெண்கள் அங்ஙனம் நெருக்குண்டு வீழ்ந்தவிடத்தில் மிதியுண்டு, ஐயோ! பரிதாபம்!! இறந்துபோயினர். இறந்த இவர்களுடைய பிரேதங்களை வழக்கம்போற் கீறிக் கிழித்துப் பரிசோதித்தற்கு அரசினர் டக்டர் சின்னச்சாமி யென்பவரை நியமித்தனர். அதனையறிந்த அங்குள்ள இஸ்லாமானவர்கள் தங்கள் தலைவராகிய மிஸ்டர் குலாம் அகமத் என்பவர் மூலமாக, இஸ்லாம் பெண்களின் பிரேதங்களை ஆடவர்களான வைத்தியர் பரிசோதிக்க விடவொண்ணாதெனத் தடுக்க, உடனே அரசினர் லேடி உவெலிங்டன் கலாசாலையிற் பயிலும் வைத்தியப் பெண் மாணவர்களைக்கொண்டு அந்தப் பிரேதங்களைப் பரிசோதிப்பித்தனராம். மகமதியர் தங்கள் பெண்களின் மரியாதையைக் காக்கும்பொருட்டு அரசினருடன் செய்துகொண்ட ஒழுங்குகள் இப்படி இன்னும் பலவுள.

ஆனால் நமது தமிழ்மக்களெனிலோ இந்த விஷயத்தில் மிகவும் அலட்சியமாக விருக்கின்றனர். ஒழுக்கம் மரியாதை யென்னும் விஷயத்தில் தமிழ்ப்பெண்களும் இஸ்லாம் பெண்கட்கு அடுத்து வைத்து மதிக்கத்தக்கவர்கள். அங்ஙனமாகவும் இப்பெண்களின் மரியாதைக்கு வேண்டிய சௌகரியங்களை நமது தமிழ்ப் பிரதிநிதிகள் அரசினரிடம் பேசிச் செய்யாதிருந்தால் வேறு யார் செய்விப்பது. இது எப்படிக் கைகூடுமென்பதை அறிய முடியாமலிருக்கின்றது. பெண்களின் பிரேதங்களைச் சோதித்தற்கும், இந்தியாவிலிருந்து மீண்டு வரும் பிரயாணிகளுட் பெண்களாயுள்ளாரைப் பரீட்சித்தற்கும், பால் கட்டுதற்கும், வைத்தியசாலைகளிற் பிரசவகாலங்களிலும் மற்றும் சுகவீனமான காலங்களிலும் வைத்தியஞ் செய்தற்கும் அரசினர் திறமைவாய்ந்த பெண்வைத்தியர்களையே நியமித்தல்வேண்டும். இங்ஙனஞ் செய்யும்படி அரசினரை நமது சட்டநிரூபண சபைப் பிரதிநிதிகள் தூண்டுதல்வேண்டும்.

## உலகம் பலவிதம்.

யாழ்ப்பாணத்திலே ஆங்கிலம் படித்த படிக்கின்ற வாலிபர்கட்கு இப்பொழுது உத்தியோகங் கிடைப்பது அரிதாய்விட்டது. மலாய்நாட்டிலும் இவர்களுக்கு உத்தியோகம் அகப்படாது. இலாபம் வந்தாலும் கஷ்டம்வந்தாலும் ஒரு உத்தியோகத்துடன் இருக்கவேண்டுமென்பது தான் இவர்கள் கொண்டுள்ள நோக்கமாகும். வயிற்றுக்கில்லாமற் பட்டினி கிடந்தாலும் கமத்தொழில் செய்தற்கு மாத்திரம் இவர்கள் ஒருபோதும் ஒருப்படார். "தொழுதூண் சுவையின உழுதூண் இனிது" என்பதையும், "உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்மா, பழுதுண்டு வேறோர் பணிக்கு" என்பதையும், 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பின்செல்பவர்' என்பதையும் நம்மனோர் அறவே மறந்துவிட்டார்கள். இனி, கமத்தொழில் செய்யவில்லையே யென்று நமது வாலிபர்களை நாம் முற்றாகக் குறை சொல்வதும் முறையல்லவெனப் புலப்படுகின்றது. ஏனென்றால் கமத்தொழில் செய்யப் புகின் நமது வாலிபர் விவாகமின்றி நித்தியப் பிரமசாரிகளாகவே யிருத்தல் வேண்டும். கமக்காரனும் தன் மகளுக்கு ஒரு உத்தியோகத்தனை மணஞ் செய்ய வேண்டுமென்ற பிடிவாதங்கொண்டே நிற்கின்றான். அவன் மகளும் அப்படியே நிற்கின்றாள். தோட்டக்காரனுக்கு என் மகள் வாழ்க்கைப்படுவதா வென்று கமக்காரனுடைய மனைவியே சொல்லி அருவருக்கின்றாள். இந்தக் காரணங்களினாலேதான் நமது வாலிபர் மனம் கமத்தொழிலிற் செல்வதில்லை.

* * *

இப்படியாக, நமது வாலிபருள் அநேகர் இப்பொழுது ஒரு புதுமுயற்சி கண்டுகொண்டனர். அது என்னவென்றால் மோட்டர் ரதம் ஓட்டுவதாகும். ஆங்கிலம் 5-ம் 6-ம் தரம் படித்தவுடனே இந்த வாலிபர்கள் யாராயினும் ஒரு சாரதியின் சிநேகத்தைப் பெற்று, வழிப்போக்கர் சிலரைக் கொன்றும் பலரைத் தட்டி வீழ்த்தி ஊறுபடுத்தியும் மோட்டாரதச் சாரத்தியம் பழகி ஒருவாறு சாரத்திய பத்திரத்தையும் பெற்றுக்கொள்ளுகிறார்கள். இப்படிச் சாரத்தியம் பயின்று அநுமதிபெற்றவர்களுட் சிலர் இன்னொருவருக்குக்கீழ், சம்பளத்திற்குச் சாரத்திய உத்தியோகம் பார்க்க, வேறுசிலர் ஏதும் காணியை ஈடு வைத்தாயினும் கடன்பட்டுச் சொந்தமாக ஒரு மோட்டரதம் வாங்கிவைத்து ஓடத் தலைப்படுகின்றார்கள். இப்படியான ஒரு வாலிபனுக்கு ஒரு ஏழைக் குடும்பத்திலுள்ள கன்னிகையை மணம் பேசியபோது அந்த வாலிபன் "என்ன சீதனங் கொடுப்பீர்க"ளென்று கேட்க அவர்கள் பெண்ணுக்கு நகை நியாயமாகப் போட்டு, 25 பரப்புக் கொண்ட வயலும் எழுதிக் கொடுப்பதாகப் பெண்ணின் பெற்றோர் சொன்னார்களாம். அதற்கு அந்த வாலிபன் "நகையை வேணுமானால் ஏற்றுக்கொள்ளுகிறேன்; வயல் வேண்டாம்; அதை விற்றுவிட்டு அந்தப் பணத்திற்கு ஒரு மோட்டாரதம் வாங்கித் தருவதானால், பெண்ணைக் கல்யாணஞ் செய்துகொள்வேன்" என்றானாம். பெண்பகுதியார் "மோட்டாரதம் வைத்து ஓடுவதில் நட்டம் வந்தாற் செய்வதென்ன" வென்று கேட்டதற்கு வாலிபன் "அதற்காகத் தானே பெண்ணுக்கு நகையிருக்கிறது" என்றானாம். "பெண்ணுக்கு நகை அவள் போட்டுக்கொள்வதற்காகவல்லவா கொடுக்கிறோம்; அவளுக்கு நகை வேண்டாமா" என்று பெண்பகுதியார் கேட்டதற்கு "பெண்ணுக்கு அவளுடைய புன்னகையிருக்குந் தானே" என்றானாம். அப்பொழுது அங்கிருந்த ஒரு முதியவர் அந்த வாலிபனைப் பார்த்து "பெண்ணின் சீதனப் பணத்தையும் அழித்து நகையையும் விற்று உடுத்த சேலையுடன் நீ அவளை விடுவாயானால் அவளிடத்துக் கண்ணீருங் கம்பலையும் இருக்குமேயல்லாமல், புன்னகை எப்படியிருக்கும்" என்று சொல்லிச் சிரித்தாராம். வாலிபன் மௌனஞ் சாதிக்க, பெண்பகுதியார் "உந்தச் சம்பந்தம் சரிவராது; நாம் வேறெங்காயினும் ஒன்றைப் பார்ப்போம்" என்று சொல்லிப் பெருமூச்சு விட்டார்களாம். நமது நாடு இப்பொழுது இந்தவிதமான நிலைமையிலிருக்கிறது.

* * *

யாழ்ப்பாணத்துள்ள அபிமானிகள் பெருஞ் சிரமப்பட்டும் அதிக பணத்தைச் செலவிட்டும் அரசினருடைய உதவியைக்கொண்டும் ஒருவாறு மதுக்கடைகள் யாழ்ப்பாணத்தில் இல்லையென்று எவருஞ் சொல்லும்படி செய்துவிட்டார்கள். மதுபரிபாலனப் பகுதியாரின் முயற்சியினால் யாழ்ப்பாணத்திலே மதுபானம் முற்றாகப் போகவில்லையென்றாலும், சிங்களர் முதலிய மற்றுஞ் சாதியினர் யாழ்ப்பாணம் மதுபானத்தையொழித்த நாடு என்று யாழ்ப்பாணவாசிகளை இதுகாறும் மெச்சிக்கொண்டிருந்தார்கள். ஆனால், பழையபடி வேதாளம் முருக்கைமரத்தில் ஏறிக்கொண்டது என்றாற்போல், யாழ்ப்பாணத்திலுள்ள சிற்சில குறிச்சிகளில் வசிப்போருக்கு மதுவிடாய் தலைப்பட்டுவிட்டது. அவர்களால் இந்த வேட்கையை நீடித்த காலத்துக்கு அடக்க முடியவில்லை. சிலகாலம் கள்வேட்கையை இவர்கள் அடக்க, இப்பொழுது கள் வேட்கை இவர்களை அடக்கிக்கொண்டது. இப்பொழுது கள்விடாய்கொண்டு நின்று தவிப்பவர்கள் யாரென்னில் தென்மராட்சியிலுள்ள குடியினரும் இந்த வண்ணார்பண்ணையிலுள்ள சிலருமே யாவர். இவர்களுக்கு மானம் மரியாதை ஒழுக்கம் குலம் புண்ணியம் கற்பு என்னுமிவைகளைப்பற்றிக் காரியமில்லையாம்; இவைகள் போனாலும் போகட்டுமாம்; கள்ளுமாத்திரம் வேணுமாம். இந்தக் குடியர் தங்கள் சாதி சமயம் நாடு என்னுமிவைகளுக்கும் தங்கள் பெண்டிர் பிள்ளைகள் சுற்றமித்திரருக்கும் தங்கள் நாட்டிலுள்ள பெரியோருக்கும் வசையைத் தேடக் கங்கணம் பூண்டு நிற்கின்றனர்.

* * *

இந்தக் குடியரைச் சுமக்கப் பாவஞ்செய்த ஊர்கள் எவையென்பதை ஏனையோரும் அறிந்துகொள்ளவேண்டு மாதலாற் சொல்லுகின்றேம். கிளாலி, மாசார், மிருசுவில், பாலாவி, அல்லாரை, எழுதுமட்டுவாள், மீசாலை, இடைக்குறிச்சி, சாவகச்சேரி, கரையூர், கண்டிக்குழி, வண்ணார்பண்ணை யென்னுமிடங்களாம். இந்த இடங்களில் உள்ள குடியினரும் குடியினர்க்குத் துணையாக நின்று வயிறு வளர்ப்போரும் மதுவியாபாரஞ் செய்து நிலையற்ற பொருளை யீட்டியவர்களுமே கள்ளுக்கடைகள் பழையபடி வேண்டுமெனகிறார்கள். இவர்கள் நூற்றுக்கு 60 பேர் விகிதமானோரைக்கொண்டு சம்மதஞ் சொல்லுவித்துப் பழையபடி கள்ளுக்கடைகளைத் திறப்பித்துக் குடிக்கவும் குடிப்பிக்கவும் மதுவியாபாரஞ் செய்யவும் முயற்சி செய்கின்றார்கள். கள்ளுக்குமாத்திரமல்ல, பஞ்சமாபாதகங்களுள் எஞ்சிய நான்கினையும் நூற்றுக்கு 60 விதமானோரின் சம்மதம் பெற்றுச் செய்யலாமென அரசினர் அநுமதி கொடுத்தால் இந்தக் குடியினர் அஞ்சாது செய்வர். இவர்களுடைய தீய முயற்சி கைகூடுமோ என்பது சந்தேகம். ஆனால் யாழ்ப்பாணத்தின் மற்றும் பாகங்களில் வசிக்கும் மரியாதையுடைய அபிமானிகள் இந்தக் குடியினரைப் பின்பற்ற நினைக்கவொண்ணாது.

### கால நிலை.

வெய்யில் அதிகம்; மழையில்லை. இவ்வப் பகுதியிலுள்ள சில கிணறுகளில் தண்ணீர் இல்லாமையினால் அங்குள்ளார் பெரிதும் கஷ்டப்படுகின்றனராம். காற்று இடையிடையே வீசுகின்றது. ஊர்ச்சுகம் நல்லாயில்லை.

### விவாகம்.

புலோலி மேற்கு ஸ்ரீ சண்முகமவர்களின் புத்திரராகிய டக்டர் ராஜேந்திர (L. M. S.) மவர்கட்கும், ஸ்ரீ J. K. சமிவாயம்பிள்ளை யவர்களின் புத்திரியும் மதுரைத் தமிழ்ச்சங்க பண்டிதையுமாகிய ஸ்ரீமதி பத்மாஸனியம்மாளுக்கும் சென்ற திங்கட்கிழமை (30-4-28) இரவு 11 மணி வரையில் நிகழ்ந்த சுபமுகூர்த்தத்தில் விவாகம் சிறப்பாக நடைபெற்றது. தம்பதிகள் சகல ஐசுவரியங்களையும் பெற்று இன்புற்று இனிது வாழும்வண்ணம் பசுபதீசுவரர் திருவருள் பாலிப்பாராக.

### கதாப்பிரசங்கம்.

இணுவில் இந்து குமாரசபையாரின் ஆதரவின்கீழ் நிகழும் விபவஞு சித்திரைமீ" உ௦ (2—5—28) புதன்கிழமை இரவு 6 மணி தொடக்கம் ஸ்ரீ அம்பிகைபாக வித்தியாலயத்தில் ஸ்ரீ சி. ஆறுமுகதாசன் அவர்களால் "திருநாளைப்போவார்" என்னும் நந்தனார் திவ்விய சரித்திரம் பக்கவாத்திய சங்கீதமாய்ப் பிரசங்கிக்கப்பட்டது. —கடித.

### சிறுபெண்ணின் கால்களைச் சுட்டமை.

கம்பளைப் பொலிஸ்கோட்டில் கலிங்குவா என்னுமொருவன் அவனது சிறுபெண்ணின் கால்களை வேகக் காய்ச்சிய இரும்பால் சுட்டதாகக் குற்றஞ்சாட்டப் பட்டிருந்தான். அவனது மகள் கிராமம் முழுவதும் வீணாக அலைந்து திரிவதைத் தடுக்கக்கூடியது இந்தவிதமான தண்டனையே யானபடியால் அவளின் கால்களை வேகக் காய்ச்சிய இரும்பால் சுட்டதாக நீதிபதிக்குக் கூறினன். நீதிபதி அவனுக்கு ஒருவருஷக் கடுஞ்சிறை விதித்தனர்.

### தபாற்பை காணாமற்போய்விட்டது.

வடமத்திய மாகாணத்திலுள்ள மருதங்கடவலை என்னுந் தபாற்கந்தோரிலிருந்து அனுப்பப்பட்ட தபாற்பை காணாமற்போய்விட்டது. இச்சம்பவம் நிகழ்ந்தும் சில நாட்களாய் இவ்விஷயம் தெரியவில்லை. இதற்குள் ரூபா 500 அனுப்பப்பட்டிருந்தது. ஏன பணம் அனுப்பப்படவில்லையென்று தபாற்கந்தோர்த் தலைவரைக் கேட்டபோது வழக்கம்போலப் பணம் அனுப்பப்பட்டதென மறுமொழி எட்டியது. ஆனால் இன்னும் அநுகூலமடையவில்லை. இப்பொழுது விசாரணை செய்து வருகின்றனர்.

### மிருகத்தைக் குரூரமாய் நடத்தல்.

நுவரெலியாப்பகுதியிலே ஓர் வண்டிக்காரன் வண்டியை ஓர்பாலத்தினமேலாய்ச் செலுத்திக்கொண்டுபோகையில், அதனை இழுத்துச் சென்ற எருதுகளுள் ஒன்று, அப்பாலத்துக் கிட்டிருந்த மரங்களின் சந்து வெளியுட் செருகிக்கொண்டது. சாரதியாகிய வண்டிக்காரன் அந்த அபாயத்தைக் கண்டு பக்கத்திலிருந்தவர்களையும், வழிப்போக்கர்களையும் அழைத்து, எருதை அந்த அபாயத்தினின்றும் மீட்டு மெல்லமெல்ல நடத்தி எசமான் வீட்டுக்குக் கொண்டுபோய்க் கட்டிவிட்டுத் தன்பாட்டிற் போய்விட்டான். எருதின் பாதம் நசிந்து சிதைந்து கடின காயப்பட்டதாயிருந்தது. எசமானும் பிறவூருக்குப் போயிருந்தான். அப்படியிருக்க, வண்டிக்காரன் எருதின் அபாயகரமான நிலைமையைப்பற்றிச் சிறிதும் அநுதாபங் காட்டாதவனாய், இரண்டு நாளாக அதற்கு யாதொரு சிகிச்சையுஞ் செய்யாமலிருந்தான். மிருக பாதுகாவற் சங்கத்தார் இதை அறிந்து, அவன்மேல் வழக்குத் தொடர்ந்தார்கள். நீதிபதி விளக்கத்திற் காரியத்தின் உண்மையையறிந்து, அவ்வண்டிக்காரனுக்கு 50ரூபா தெண்டமடித்தனர்.

### நீதிஸ்தலத்தை அவமதித்தல்.

எளாலையிலுள்ள பொலிஸ் விதானைக்கு அவர் மல்லாகம் பொலிஸ்கோட்டிலிருந்து வீட்டுக்குப் போகும்பொழுது எளாலைவாசியான கந்தையா என்னுமொருவர் செருப்பாலடித்தாரென மல்லாகம் பொலிஸ்கோட்டில் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறார். இந்த எதிரியினது மைத்துனனான சங்கரப்பிள்ளையென்பவர் வேதிருவருக்கு விரோதமாகத் தமக்கு அடித்தாரென ஒரு வழக்குத் தொடர்ந்திருந்தனர். கோட்டார் விதானையை விசாரித்தபொழுது இருகட்சியாரும் ஒரு கள்ளுக் கொட்டிலைப்பற்றிச் சண்டையிட்டனரெனவும், அதுவே இக்கலகத்திற்குக் காரணமெனவும், விதானை கூறினார். இவ்வழக்கு நீதிபதி முன்னிலையில் சமாதானமாக்கப்பட்டது. நீதிபதி அப்பொழுது இருகட்சியாரையும் சமாதானமாகச் சீவிக்கும்படி எச்சரித்தனுப்பினர். விதானை கோட்டைவிட்டு 200 யார் தூரம் போனவுடன் எதிரியாகிய கந்தையா என்பவர் ஓடிச்சென்று விதானையைக் கழுத்திற் பிடித்துத் தன்னிச் செருப்பால விதானைக்கு அடித்தனர். எதிராளி விதானையினுடைய ஆட்களால் பிடிக்கப்பட்டுக் கோட்டுக்குக் கொண்டுவரப்பட்டார். எதிராளியின் தாய் அப்பொழுது கூக்குரல் செய்து கோட்டைக் குழப்பினள். கோட்டை அவமதித்ததற்காக நீதிபதி அவளுக்கு ஒருநாட் சிறை விதித்தனர். எதிராளி அடைக்கப்பட்டார்.

### ஜனத்தொகை.

1800-ம் ஆண்டில் உலகின் ஜனத்தொகை 85 கோடியே 80 லக்ஷம் இப்போதைய ஜனத்தொகை 170 கோடி. இப்பூமி 520 கோடி ஜனங்களுக்குமேல் காப்பாற்ற முடியாதென்று விஞ்ஞான சாஸ்திரிகள் கூறுகின்றனர். தற்போது ஜனத்தொகை பெருகிவரும் விதப்படியே பெருகிவந்தால் இன்னும் ஒரு நூற்றாண்டில் ஜனத்தொகை 520 கோடிக்கு வந்துவிடும.

### உலகிற் பெரிய புத்தகம்.

உலகில் மிகப் பெரிய புத்தகம் திபேத் காட்டாரின் வேத புத்தகந்தான் என்று தெரியவந்திருக்கிறது. இருநூறு பெரிய வால்யங்கள் அடங்கிய இப்பிரமாண்டமான புத்தகத்தை நூறு கூலியாட்கள் தூக்கிக்கொண்டு திபேத்திலிருந்து பெக்கிங்குக்குப் புறப்பட்டிருக்கிறார்கள். பெக்கிங்கில் அப்புத்தகத்தைச் சீன பாஷையில் மொழிபெயர்க்கப்போகிறார்கள்.

### 44 நாட்களில் பூலோகத்தைச் சுற்றிவருதல்.

பதினைந்து வயது சென்ற பாலி என்ற தென்மார்க்காட்டுச் சிறுவன் நாற்பத்து நாலு நாட்களில் பூலோகத்தைச் சுற்றி வந்துவிட்டானும். சென்ற மார்ச்சு மாதம் 2-ந் திகதி புறப்பட்டு ஏப்ரல்மாசம் 13-ந் திகதி தனது சொந்த ஊரான கோபனேகன் போய்ச் சேர்ந்தானும். உலகஞ் சுற்றிவந்த சிறுவனை ஊரார் அனைவரும் கொண்டாடினார்கள்.

### லண்டன் மிருகக் காட்சிச்சாலை.

லண்டன் மிருகக்காட்சிச்சாலையில் தற்போதிருந்துவரும் மிருகங்களை அதன அதிகாரிகள் கணக்கெடுத்து வருகின்றனர். பால் குடிக்கும் மிருகக் குட்டிகளில் மொத்தம் 2027 இனங்களிருக்கின்றன. மீனகள், ஊர்வன செந்துக்கள் ஆதியவற்றில் 2000 த்திலிருந்து 3000 வகைக ளிருக்கின்றன. சிறிய கிருமிகள் எண்ணிறந்த வகைக ளிருப்பதாயும் அவை கணக்கிட முடியாதென்றும் சொல்லப்படுகிறது.

### தீர்க்காயுசுக் குடும்பம்.

மாட்ரிட் என்றவிடத்தில் நீண்ட ஆயுளுள்ள குடும்பமொன்றிருக்கிறது. தாய்க்கு 127 வயதாகிறது. அவருடைய ஐந்து குழந்தைகளுக்குமமுறையே 111, 109, 108, 106, 105, வயதுகளாகின்றன.

பெலோன் வாசியான ஒரு யூதர் 125 ஆண்டுகள் வாழ்ந்திருந்து சமீபத்தில் தான் காலஞ்சென்றாராம. அவரது மனைவிக்கு இப்பொழுது வயது 119. அவருடைய ஆறு பிள்ளைகளுள் இளைய பிள்ளைக்கு இபபொழுது ஒனபது வயதுதான் ஆகிறதாம். இவர் தமது வாழ்நாளில் ஒருநாளும் நோய்வாய்ப்பட்டதில்லையாம்.

### உலகில் மிகப்பெரிய கப்பல்.

உலகில் மிகப்பெரிய நீராவிக் கப்பல் பிரிட்டிஷாருக்குச் சொந்தமான "மெஜஸ்டிக்" என்பதேயாகும். இதன் நிறை, 56,551 டன். நீளம் 956 அடி; அகலம் 100 அடி; உயரம் 102 அடி. இக்கப்பலில் 15,000 மின்சார விளக்குகள் இருக்கின்றன. ஒவ்வொரு பிரயாணத்தின ஆரம்பத்திலும், பிரயாணிகளின உணவுக்காக 75 டன் இறைச்சி; 28 டன் மீன் 30 டன் உருளைக்கிழங்கு; 80,000 முட்டை; 2½ லட்சம் சுருட்டுகள் ஆகிய இவை சேகரித்து வைக்கப் படுகின்றன. 8,00,000 கலன தண்ணீரும் நிரப்பப்படுகிறது. இக்கப்பலிலுள்ள எல்லாத் தட்டுகளையும் ஒருமுறை முழுதும் சுற்றிவிட்டுவர ஒன்பதுமைல் நடக்க வேண்டுமாம்.

### வெறும் புகைவண்டியில் நித்திரைசெய்த ஸ்திரீக்குத் தண்டனை.

இரத்தினபுரிப் புகைரதஸ்தானத்தில் பிரயாணிகளில்லாத ஓர் புகைரதவண்டியில் நித்திரை செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட ஓர் சிங்களப்பெண் தான முதனிரவு டேலா என்னுமிடத்திலிருந்து தன் குழந்தைக்குக் கண்வைத்தியம் செய்விப்பதற்காக இரத்தினபுரிக்குவந்ததாகவும், அங்குள்ள டக்டர் கொழும்புக்குக் கொண்டுசென்று வைத்தியஞ் செய்விக்கும்படி கூறியபடியால் அன்றிரவு புகைவண்டியில் நித்திரைசெய்து மறுநாட்காலை புறப்படும் புகைரதத்தில் கொழும்புக்குச் செல்ல விருந்ததாகவும் கூறினுள். பொலிஸ் நீதிபதி அவளைக் குற்றவாளியெனக் கண்டு ½ வாரக் கடுஞ் சிறைத்தண்டனை விதித்துப் பிள்ளையை வைத்தியசாலைக்குச் சிகிச்சைக்கனுப்புமாறு உத்தரவுசெய்தனர்.

### ஆங்கிலபாஷா மோகம்.

ஆங்கிலபாஷையை 16,00,00,000பேர்களும, ஜர்மனபாஷையை 11,00,00,000 பேர்களும, ஸ்பெயினபாஷையையும் இத்தாலியபாஷையையும 7,00,00,000 பேர்களும, சீனபாஷையை 40,00,00,000 பேர்களுமாகப் பேசிவருகின்றனர்.

### கிணற்றுக்குள் பித்தளைப்பாத்திரம்.

சென்ற சில தினங்களுக்கு முன்பு தொடுபுழையைச் சேர்ந்த ஓர் குயவன வைத்தியசாலைக் கருகிலுள்ள ஓர் கிணற்றினுள் இறங்க நேர்ந்தது. இறங்கியதும குயவன் அதனுள் ஓர் பிரமாண்டமான பித்தளைப் பாத்திரத்தைக் கண்டான. இது ஓர் புதையலா யிருக்குமாதலால் இதைப் பட்டப்பகலில் விட்டுக் கெடுத்துச்செலவது உசிதமல்லவென்று எண்ணிக் குயவன அன்றிரவு கிணற்றினுள் இறங்கி அப்பாத்திரத்தை எடுக்க ஆரம்பித்ததும் இவனுக்கு மயக்க முண்டாகிவிட்டது. பாம்புகள் தன் உடலைச் சுற்றி வளைத்துக்கொண்டாற்போல் இவனுக்குக் காணப்பட்டது. ஆதலால் இவன தன் முயற்சியை விட்டுவிட்டு வீட்டிற்குச் சென்றான். சென்றதும் இவனுக்குச் சுரம் கண்டது. வைத்தியசாலைக்குக் கொண்டுபோகப்பட்டும் இவன் இறந்துவிட்டான்.

### இரண்டு அங்குல இஞ்சின்.

உலகத்தில் இருக்கும் ரயில்வே இஞ்சினகளில பெரியவை அமெரிக்கா இங்கிலாந்து முதலிய விடங்களி லிருப்பதாகக் கேளவிப்பட்டிருக்கிறோம் உலகத்திலிருக்கும் இஞ்சினகளையெல்லாம்விடச் சிறிய இஞ்சினொன்றையும் இப்பொழுது செய்திருக்கின்றனர். அந்த இஞ்சின உள்ளங்கையில் வைத்துக்கொள்ளக் கூடிய அளவுக்கு அவ்வளவு சிறிதாயிருக்கிறது. அதன நீளம 2 அங்குலமே. லண்டனில் ஸ்ரீ எ. ஆர். வாலகி என்பவர் தான அதைச் செய்திருக்கின்றார். உள்ளே மினசார வசதியையும் வைத்திருக்கிறாரகையால், இரண்டு றாத்தல நிறையுளள வண்டித் தொடரையும அது இழுத்துவிடுகிறது.

இஞ்சினில் மிகச் சிறியதொன்றைச் செயதிருப்பதைப்போன்றே சிறிய கப்பலொன்றையும் செய்திருக்கிறார்கள்; அது ஐந்து அங்குல நீளகதாயிருக்கிறது.

ஒரு வெள்ளை மாணவர் தனக்கு ஏற்பட்ட ஓய்வுநேரங்களில் 5½ அங்குல உயரமுள்ள மோட்டாரைச் செய்திருக்கிறார். அதன் நிறை 4½ இறாத்தல். அதில் மினசாரவிளக்குகளைக்கூடப் போட்டிருக்கிறார்.

### இலங்கைத் தாதியருக்கு விசேஷ பயிற்சி.

அரசினரின்கீழ் வேலையிலமர்ந்திருக்கும்இலங்கைத் தாதியரை (Nurses) இங்கிலாந்திற்கு அனுப்பி அவர்கள் உயர்ந்த உத்தியோகங்களில் இடம்பெற்று அதினுல் அதிக ஊதியத்தையடையக் கூடியவர்களாக அவர்களைப் பயிற்றுவதற்கு அரசினர் உத்தேசிக்கின்றனரெனத் தெரிகிறது. இலங்கைத்தாதியர் பெறும் குறைந்த வேதனத்தைப்பற்றியும் அவர்களடையும் குறைவான ஊதியத்தைப்பற்றியும் அநேக முறைகளில் சட்டநிருபண சபையில் வாக்குவாதங்கள் நிகழ்ந்தன. கௌரவ அலன் டிறிபேர்க் அவர்கள் சட்டநிருபண சபையில் பேசிய பொழுது, வேதனத்திலும் ஊதியத்திலும் ஐரோப்பிய தாதியர்க்கும் இலங்கைத் தாதியர்க்குமுள்ள வித்தியாசத்தைப் பற்றிக் கூறி அவர்களை விசேஷமாக நடத்தவேண்டுமெனவும், அவர் தம் கடமையில் தம்மைத் தியாகஞ் செய்பவர்களா யிருக்கிறார்களெனவும் தாதியர்தொழிலில் அவருக்கொப்பார் ஒருவருமில்லையெனவும் கூறினார். இப்பொழுது 6 மாணவரை விசேஷ பயிற்சியடைவதற்கு இங்கிலாந்திற்கு அனுப்ப உத்தேசித்திருக்கிறார்கள். இதற்காக விண்ணப்பப் பத்திரங்களனுப்பியவர்களில் 6பேரைத் தெரிவு செய்தற்குச் சங்கமொன்று நியமிக்கப்பட்டிருக்கின்றது. இப்பொழுது இச்சங்கம ஒவ்வொரு விண்ணப்பக்காரரையுமழைத்து அவர்களை விசாரணை செய்து கொண்டுவருகிறது. தெரிந்தெடுக்கப்பட்ட மாணவர் அவர்களது தேகநிலைமையைப் பற்றிப் பரீட்சிக்கப்படுவார்கள். இவ்வண்ணம் பரீட்சிக்கப்பட்ட பின்னர் சுகாதாரப் பகுதித் தலைவருக்கு அறிக்கை செய்யப்படும். அவர் அவ்விஷயத்தைப்பற்றி அரசினருக்கு அறிக்கை செய்வார். இத்தாதியரைப் பயிற்றுவதற்கு இங்கிலாந்திலுள்ள எந்த வைத்தியசாலைக்கு இவர்கள் அனுப்பப்படுவார்களென்பது இப்பொழுது தெரியவில்லை. எப்படியாலும், இவர்கள் மூன்று வருஷகாலத்திற்குப் பயிற்றப்படுவார்கள். இப்பயிற்சியில் அநுகூலமடையும் தாதியர் இலங்கைக்கு வந்தவுடன் இலங்கையிலுள்ள வைத்தியசாலைகளில் உத்தியோகத்திலமர இடம்பெறுவார்களென்பது திண்ணம்.

### ஆறு பெருக்கும் அரும் பாவம்.

— :0: —

"கூறுபோட்டவன் கொன்றவன் தின்றவன் கூடநின்றவன் கண்டவன் கேட்டவன்"
அறுபேருக்கும் அருநரகேகதி.

இரக்கமுடைய சைவசமயாபிமானிகளே!

திருக்கோயிலிலே சுவாமிக்கு அபிடேகம், பூசை, திருவிழா முதலியவைகளைச் செய்யும்படி விதிக்கின்ற சைவசமயம் ஆடுகோழிகளையும் வெட்டும்படி விதிக்கின்றதா? இல்லையே! பின்பு வீண் பழியையும் பாவத்தையும் ஏன் தேடுகின்றீர்கள். குழிக்கப்போய்ச் சேறு பூசலாமா?

அருட்பொலிவும் அன்பும் தூய்மையும் நிறைந்த திருக்கோயில்களில் அம்மா அம்மா என்ற அழுகைச் சத்தங் கேட்கலாமா? ஐயோ! இரத்த வெள்ளம் பெருகலாமா? அவைகள் இறைச்சிக் கடைகளாகலாமா? பரிதாபம்! பரிதாபம்!

எங்களையும் உங்களையும் ஆடுகோழிகளையும் பெற்ற பிதாவாகிய கடவுளுக்கு முன்னே அவர் பிள்ளைகளாகிய வாயற்ற வலியற்ற ஆடுகோழிகளைக் கதறக் கதற வெட்டுகின்றீர்களே? இதனுற் கடவுள் அருள் கிடைக்குமா? அல்லது நரகங் கிடைக்குமா? ஆராய்ந்து பாருங்கள்.

பெரியோர்களே! ஒருவன் கழுத்திலே கயிற்றை மாட்டி முனனே நின்று இழுக்கின்றான். ஒருவன் காலிரண்டையும் இறுக்கி நெரித்துப் பின்னே நின்று இழுக்கிறான். ஒருவன் பத்துநாளாய்த் தீட்டிச் சாணைபிடித்தகொடுவாளக்கத்தியை நடுவே நின்று ஓங்குகின்றான். ஆ! சிவ சிவா!! வெட்டு விழப்போகின்றது. ஆடு படும் பாட்டைச் சற்றே நினையுங்கள்.

ஐயோ! அது வளர்த்தவன் முகத்தைப் பார்த்துப் பார்த்து அழுகின்றதே! கடவுளை நோக்கி இரங்குகின்றதே! உள்ளம் நடுங்குகின்றதே!! உடம்பு பதறுகின்றதே! கண் கூசுகின்றதே!! அப்பொழுது அரகரா! கத்தி கழுத்தில் விழுகின்றது; தலையறுகின்றது; இரத்தம் குபிர் குபிர் என்று பாய்கின்றது; வாய் ஆ! ஆ!! என்று சாபம்போடுகின்றது; உடம்பு மண்ணை வாரி இறைத்துத் திட்டுகின்றது. இதனைக் கண்கொண்டு பார்க்கலாமா? காதினுற் கேட்கலாமா? அடடா! துரோகம்! துரோகம்!!

அன்புடையவர்களே! உங்கள் பிள்ளைகளை உங்கள் முன்னே இந்த விதமாகச் சில கொடியவர்கள் சித்திரவதை செய்து கொன்றால்,நீங்கள் மனஞ் சகிப்பீர்களா? கொன்றவர்களுக்கு அருள் செய்வீர்களா? ஆராய்ந்து பாருங்கள்.

ஒன்பதுநாள் பூசை திருவிழா விரதப் பலனைப் பத்தாம்நாள் இழந்துவிடாதீர்கள். இரங்குங்கள்; அப்பொழுது தான் கடவுள் உங்களுக்கு இரங்குவார்.

வட்டுக்கோட்டைச்
சைவாங்கிலவித்தியாசாலை
இந்துவாலிபர்சங்க வெளியீடு.

### இப்பழி யாரைச்சாரும்?

இந்துசாதனப் பத்திராதிபர் அவர்கட்கு.

ஐயா,

இங்கு நேற்றுச்சாயந்தரம் எங்கள் சகோதரிமாரில் ஒரு இளம்மாது தூங்கித் தன் துக்கமான சீவியத்துக்கு ஒரு முடிவுசெய்து கொண்டனள். இம்மாது அராலியிலுள்ள ஒரு சைவக் குடும்பத்தைச் சேர்ந்த ஓர் உத்தமி. மிகவும் அழகான, தேகபலமுள்ள, இளமையான, கடவுள் பயபக்தியிற் சிறந்த, பிறவியில் மாயிசத்தின் மணத்தை அறியாத, "பொன்மயி லொத்திடு மாதர் தங்கற்பின் புகழினிலே யுயர்நாடு" என விளங்கும் நம் நாட்டுக்குத் திலகமென விளங்கத்தக்க ஒரு கண்ணகி. பெற்றோர் இப்பெண்மணியின் சுகுணங்களுக்கு மாறான குணம்பூண்ட குடியினர். ஒருவருக்கு இப்பெண்ணை இரண்டாந்தாரமாக மணஞ்செய்து கொடுத்தனர். இதுவே இப்பெண் தன் உயிரை விடுதற்கு ஏதுவாயதாம். இது விதியல்ல மதியீனம். செத்தது பெண்பிள்ளை தானே. ஆண்பிள்ளை மரித்தால்தானே நட்டம்.

தாப்பா,
21—4—28.

S. M.

### ஏழாலைச் சைவபாலியர் சங்க நான்காவதாண்டு நிறைவுவிழா.

இச்சங்கத்தின் நான்காவதாண்டு நிறைவு விழா இந்தமீ 17௳ (29-4-28) ஏழாலைச் சைவவித்தியாசாலையில் 7-30 மணியளவில் வெகு விமரிசையாய் நடாத்தப்பட்டது. தோரணங்களினுலும், பூக்களினுலும் அலங்கரிக்கப்பட்ட மண்டபத்தில் சங்க அங்கத்தவர்களும் கிராமவாசிகளும் வேறு சில சைவநன்மக்களும் அமரவும் அனறு அக்கிராசனம் வகித்த கௌரவ திரு. சு. இராசரத்தினம் அவர்கள் அத்தருணத்துக்காகச் செய்யப்பட்ட மேடையின்மேல் அமரவும் கூட்டம் தேவாரப… யனத்துடன் தொடங்கியது. பின் அவரு… மாலைகள் சூட்டப்படவும் திரு. செ. சின்… துரை வந்தனோபசாரங் கூறினர். திரு. மு… ஞானசுந்தரம் காரியதரிசி சென்ற ஆண்டு… அறிக்கைப்பத்திரம் வாசித்தார். பின் தி… இ. இளையதம்பி தனுதிகாரி சென்ற ஆண்டி… வரவுசெலவுக் கணக்கு வாசித்தார். மாண… கள் சு. குமாரசுவாமி, மா. கணபதிப்பிள்… பாக்கள் கூறினார்கள். பெரிய புராண… விருந்து, சம்பந்தரும் அப்பரும் சந்திக்கும் … இயில் 3 பாக்கள் மாணவர்கள் நா. இரத்… சபாபதியாலும், மு. கந்தையாவாலும் வாசி… கப்பட்டு பயன் சொல்லப்பட்டது. பின் மாண… வர் க. சுந்தரம் "ஆலயவழிபாடு" என்னும் விஷ… யத்தைப்பற்றி ஓர் சொற்பொழிவு செய்தார். மாணவர்கள் க. குமாரசுவாமி, க. சிவஞானசுந்… தரம், இ. குணரத்தினம் இவர்களுக்கிடையில் மதுபானத்தின் தீமையடங்கியுள்ள ஓர் சம்பா… ஷணை நடைபெற்றது. பின் மாணவர் மு. ஞானப்பிரகாசம் "சமயாபிமானம்" என்னும் விஷயத்தைப்பற்றிக் கேட்டோர்மனம் களிக்குமாறு இனிய செந்தமிழில் ஓர் சொற்பொழிவு செய்தார். திருவாளர்கள் தெ. அ. துரையப்பா பிள்ளையவர்களாலும், செ. ச. துரையப்பா அவர்களாலும், வே. தம்பையா அவர்களாலும் குறிப்புரைகள் கூறப்பட்டன. பின் அக்கிராசனர் சங்கத்தாருக்கு உற்சாகமான சிலமொழிகளைக் கூறினார். கூட்டம் 10 மணியளவில் சமாப்தியாயிற்று.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக
உலகமெல்லாம்."

கடித.

### காந்திஜி ஐரோப்பா செல்லாததற்குக் காரணம்.

இந்தியாவில் நான் வெற்றியடைந்தால் என் வேலை முடிந்துவிட்டது.

ஆமதபாத் ஏப்ரல் 26.

இவ்வருஷம் தாம் ஐரோப்பாவுக்கு விஜயம் செய்யவிருந்ததை ஏன் நிறுத்திக்கொண்டார் என்பதை மகாத்மா காந்தி ஏப்பிரல்மீ 26-ந் தேதி வெளிவந்த "யங் இந்தியா" வில் பின் வருமாறு விளக்குகின்றார்:—

என்தேக நிலைமையை உத்தேசித்தோ அல்லது காட்சிகளைக்கண்டு களிப்பதற்காகவோ மேனுடுகளுக்குச் செல்ல எனக்கு இஷ்டமில்லை. பொதுக் கூட்டங்களில் பிரசங்கங்கள் செய்யவும் இஷ்டமில்லை. சிங்கம் போன்று கர்ஜிப்பதை நான் வெறுக்கிறேன். பொதுக் கூட்டங்களில் பேசுதல் ஆடம்பரங்கள் இவைகளை தாங்கிக் கொள்வதற்கேற்ற சரீர நிலைமையை நான் இனிமேல் பெறுவேன் என்பது சந்தேகம். கடவுள் என்னை எப்பொழுதாவது மேனுடுகளுக்கு அனுப்புவாராகில் ஏழை ஜனங்களின் ஹிருதயங்களில் ஊடுருவிப் பாயவும், ஆங்குள்ள இளைஞருடன் ஆடம்பரமின்றிப் பேசவும், என்னைப்போன்ற மனப்பான்மையைக் கொண்டவர்களுடன் பேசவும் சப்தாபிமானிகளுடன் பேசவும் தான் நான் செல்லவேண்டும். ஆனுல் நானே மேனுடுகளுக்கு நேரில் சென்று சொல்லவேண்டிய செய்தி தற்பொழுது ஒன்றுமில்லை என நான் எண்ணுகிறேன்.

அலைந்து செல்லவில்லை.

நான் விடுக்கும் செய்தி உலகத்துக்கெல்லாம் பொருத்தமானது, என நான் எண்ணுகிறேன். நான் விடுவிக்க வேண்டிய சக்தியை என்னுடைய தேசத்திலேயே இருந்து வேலை செய்வதாலேயே நன்கு நிறைவேற்றலாமென்பதே எனது துணிபு. இந்தியாவில் நான் எடுத்துள்ள காரியத்தை வெற்றியுடன் நடத்திக்காட்ட என்னுல் முடியுமானுல் நான் விடுவிக்கவேண்டிய செய்தி பூர்த்தியாகி விடுகிறது. என்னுடைய உபதேசங்களை இந்தியா பயன்படுத்திக் கொள்ளா என்ற முடிவிற்கு நான் வந்து விட்டேனுனுல் என் உபதேசங்களைக் கேட்கிறவர்கள் எங்கிருக்கிறார்கள் என்று நான் அலைந்துகொண்டு செல்ல வேண்டியதில்லை.

மனதிலே வெளிநிலை.

நான் இந்தியாவை விட்டுச் செல்லலாமென்ற முடிவுக்கு வந்ததன் காரணம் நான் இந்தியாவின் மீது வைத்துள்ள நம்பிக்கையே யன்றி வேறில்லை. இந்நம்பிக்கையை என்னுல் யாவரும் திருப்திப்படும்படி காட்ட முடியவில்லை. எவ்வளவு மெதுவாக நடந்தாலும் சரி இந்தியா என்னுடைய செய்தியைக் கடைப்பிடித்துத் தான் வருகின்றது. ஆனுல் எல்லாம் சரியாய் நடந்து அடுத்த வருஷம் என்னுடைய நண்பர்கள் என்னைக் காண இஷ்டப்பட்… யிடப்பட்டிருக்கும் பிரயாணத்தை … மேலே குறிப்பிட்டுள்ள பலமான நிபந்த… கட்டுப்பட்டே ஏற்றுக்கொள்ள முயற்சி செய்வேன்.

என்னுடைய உபதேசங்களை விடுக்க நான் தயாராயிருந்தாலும் சரி இதை நான் செய்வேன். என்னுடைய நண்பர்களின் முகங்களை நான் நேரில் காணுவது ஓர் சாதாரண பாக்கியமல்ல. ஆனுலும் நான் ஒன்றுமாத்திரம் கூற விரும்புகிறேன். நான் எப்பொழுதாவது மேனுடுகளுக்கு விஜயம் செய்யும் பாக்கியம் ஏற்படுமாகில் அந்நாடுகளிலுள்ள சீதோஷ்ண நிலைமைக்கு வேண்டிய அளவுக்கு மேல் என்னுடைய உடையையோபழக்கவழக்கங்களையோ நானே ஏற்றுக்கொண்டுள்ள நியபந்தனைகளையோ மாற்றிக்கொள்ள முடியாது. என்னுடைய மனத்திலிருக்கும் நிலையைத்தான் என்னுடைய வெளித்தோற்றம் உணர்த்துகின்றது. என … நான் நம்புகிறேன்.

"தேசபக்தன்"

## மயிலிட்டி தெற்கு பாலர் ஞானோதயசங்க 5 - வது வருடாந்தக் கூட்டம்.

சென்ற பிரபவ௵ பங்குனி௴ உகூஉ (8-4-28) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் கூடிய நிருவாகசபையின் உத்தரவின்படி (10-4-28)ல் வெளிவந்த அழைப்புப் பத்திரப்படியும், 1928-ம் ஆண்டு ஏப்பிரல் மாசம் 12-ந் தேதி வெளிவந்த இந்துசாதன விளம்பரப்படியும் பிரபவ௵ சித்திரை௴ கூரு௳ (25-4-28) புதன்கிழமை பிற்பகல் ஆறரை மணியளவில் ஞானோதய வித்தியாசாலை மண்டபத்தில் பாலர் ஞானோதய சங்க ஐந்தாவது வருடாந்தக் கூட்டம் ஆரம்பமாயது.

அன்றையதினம் ஆறரை மணியானதும் பாடசாலை மண்டபம் போதாதென்று சொல்லத்தக்கதாக அங்கத்தினரும் பணவுதவிபுரிந்தோரும் அயலூரவருமாகிய அநேகர் குழுமியிருந்தனர். அத்தருணம் சங்கத் தலைவர் ஸ்ரீ சி. சுவாமிநாதன் B. A. அவர்களின் அக்கிராசனாதிபத்தியத்தின்கீழ் தேவார பாராயணத்துடன் கூட்டம் ஆரம்பமாயது. வருடாந்த அறிக்கைப்பத்திரம் வாசித்துச் சபையோரால் அங்கீகரிக்கப்பட்டபின் புது வருடத்திற்குரிய உத்தியோகஸ்தர் சர்வசன சம்மதத்துடன் பின்வருமாறு தெரிவுசெய்யப்பட்டனர்.

அக்கிராசனர்: ஸ்ரீ சி. சுவாமிநாதன் B. A.<br>
உப அக்கிராசனர் ,, அ. பொன்னையா<br>
,, ந. பூதப்பிள்ளை<br>
,, ,, நா. சின்னையா<br>
செயலாளர்: ,, க. பூ. பொன்னம்பலம்<br>
,, ,, சி. நாகலிங்கம்<br>
பொருளாளர் ,, சி. சரவணமுத்து<br>
பத்திராதிபர்: ,, வை. கந்தையா<br>
,, ,, சி. வேலுப்பிள்ளை

ஷை உத்தியோகஸ்தரும்

ஸ்ரீ சு. செல்வத்துரை, ஸ்ரீ க. கந்தையா, ஸ்ரீ க. சுப்பிரமணியம், ஸ்ரீ கா. சின்னத்தம்பி, ஸ்ரீ அ. மாப்பாணர், ஸ்ரீ க. வைரமுத்து, ஸ்ரீ ந. நாகலிங்கம், ஸ்ரீ பூ. வீரவாகு, ஸ்ரீ க. சின்னக்குட்டி, ஸ்ரீ க. வேலுப்பிள்ளை ஆதியோரும் நிருவாகசபை அங்கத்தினராவர்.

பின் திருவாளர் தே. அ. துரையப்பாபிள்ளை அவர்களால் அன்பு, பொறை, ஒற்றுமை, கட்சியே பகைக்குக் காரணம் என்னும் விடயங்களை அடக்கி அப்ப நேரத்தில் அதிக விளைவைக் கொடுக்கக்கூடிய ஓர் சிறந்த சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது.

இரண்டாவதாக அக்கிராசனர் எழுந்து சென்றவருடம் பாடசாலையும் சங்கமும் இருந்த நிலைமையைப்பற்றியும், அங்கத்தவர் சிலர் தம் துரோகத்தால் நாலாவதுபிரமாணம் 5-ம் பிரிவின் நிபந்தனைக்கு மாறய் பதினறுபேர் அடங்கிய நிருவாகசபை அங்கத்தவரில் பதின்மருக்கறிவிக்காமலும், ஓர்வித பிரசித்தவிளம்பரங்களில்லாமலும், சபைத் தலைவரினனுமதியின்றியும், பாடசாலை முகாமைக்காரரினதும் தலைமை யாசிரியரினதும் உத்தரவின்றியும், களவாய் (9-4-26) ல் ஓர் வருடாந்தக் கூட்டம் கூடியதாகவும், அது சபைத்தலைவருக்கும் மற்றையோருக்கும் ஆச்சரியத்தை விளைக்கிறதென்றும், அதுவே வருடாந்தக் கூட்டம் எனத் தாபிக்க முயல்கின்றனர் என்றும், பஞ்சாயத்தாருக்கு அதிக உரித்திருக்கின்றதென றெண்ணிப் பாடசாலைக் கிரட்டைத் தாடபாளிட்டுத் தம் துரோகத்தைச் சாதித்தனரென்றும், அவர்கள் கொடுமையைச் சகிக்கலாற்றாத தலைமையாசிரியர் பூட்டை முரித்து உட்புகுந்தனரென்றும், பாடசாலை நன்னெறிக்கத்தைப்பற்றியும் சபையோர் திகிலுறுமாறு வற்புறுத்திப் பேசினர். பேசியபின் ஐந்தாவது பிரமாணம் இரண்டாம் பிரிவின் படியும் பதினொராவது பிரமாணம் முதலாம் பிரிவின்படியும் பஞ்சாயத்தாரைத் தெரிவுசெய்யுமுரித்து நிருவாக சபைக்கே உரியதாதலாலும், சென்ற வருடத்தில் பள்ளிக்கூடமும் சங்கமும் பஞ்சாயத்தாராலதிக பங்கமடைந்தபடியாலும், பஞ்சாயத்தைத் தெரிவுசெய்யும் உரிமை நிருவாகசபைக்குச் சர்வசன சம்மதத்துடன் அக்கிராசனரால் விடப்பட்டது. பின்னர் பஞ்சாயம் வேண்டுமானல் நிர்வாகசபை கூடி அதில் தெரிவு செய்யலாமெனவுந் தீர்மானிக்கப்பட்டது.

அப்பால் பண்டிதர் மாணிக்கத்தியாகராசா அவர்களால் "நாரைக்காலம்மையார்" சரித்திரம் பக்கவாத்திய சகிதமாய்க் கேட்டோர் ஆனந்தசாகரத்தி லமிழ்ந்துமாறு பிரசங்கஞ் செய்யப்பட்டபின் இரவு பத்து மணியளவில் தேவார பாராயணத்துடன் கூட்டம் முடிவுற்றது.

கடிதம்.

---

## புங்குடுதீவு ஸ்ரீ கணேசவித்தியாசாலைப் பழைய மாணவர் சங்க மூன்றுவதாண்டு நிறைவுவிழா.

இச்சங்கத்தின் மூன்றும் வருடாந்த விழா விபவ௵ சித்திரை௴ 8-ம் 9-ம் 10-ம் தேதிகளில் நடந்தேறியது. 8௳ வெள்ளிக்கிழமை உச்சிக்காலம் ஸ்ரீ கணேசமூர்த்திக்கு அபிஷேக ஆராதனை சிறப்புற நடைபெற்றது. இரவு அலங்கரிக்கப்பட்டிருந்த ஸ்ரீ கணேசவித்தியாசாலை மண்டபத்தில் பலர் குழுமியிருந்தனர். அத்தருணம் ஆரிய கலாசாலைப் போசிரியர் ஸ்ரீ அ. பொன்னையா அவர்களின் அக்கிராசனத்தின்கீழ் தேவாரபாராயணத்துடன் கூட்டம் ஆரம்பமாயது. வித்தியாசாலைச் சிறுமிகளால் தலைவர்க்குச் சோபனமும், பழைய மாணவரால் வந்தனமும் கூறப்பட்டன. காரியதரிசியின் அறிக்கைப்பத்திரமும், தனாதிகாரியின் வரவுசெலவுக்கணக்கும் முறையே வாசித்து அங்கீகரிக்கப்பட்டபின், சங்க உத்தியோகத்தர் தெரிவுசெய்யப்பட்டனர். அதன் பின்னர் ஸ்ரீ செல்லையா அமரசிங்கம் B.A. அவர்களாலும், ஸ்ரீ வே. சிவப்பிரகாசம்கொத்தாரிஸ் அவர்களாலும், ஸ்ரீ ம. தம்பு உபாத்தியாயர் அவர்களாலும், நியாயதுரந்தரர் ஸ்ரீ க. ஐயாத்துரை அவர்களாலும், சங்க முன்னேற்ற விஷயமாகக் குறிப்புரைகள் கூறப்பட்டபின்னர் அக்கிராசனரவர்கள் பழைய மாணவர்க்கோர் உபதேசமாக விரிந்ததோர் பிரசாரணங் கூறினர். காரியதரிசியால் அக்கிராசனர்க்கும், சபையோர்க்கும் வந்தனங் கூறப்படத் தேவார பாராயணத்துடன் முதல்நாள் விழா நிறைவெய்தியது.

இரண்டாம்நாள் காலை 7 மணிக்கு எல்லா வித்தியாசாலை மாணவர்களும் உயரப்புலம் முற்றவெளியில் வந்து குழுமி, பத்தரைமணிவரையும் தாட்சிவிளையாட்டுப் புரிந்தனர். அதில் ஸ்ரீ சுப்பிரமணியவித்தியாசாலை ஜெயமடைந்தது. பதினொருமணி முதல் இரண்டு மணிவரையும் எல்லா வித்தியாசாலை மாணவர்க்கும், பிறர்க்கும் மேற்படி வித்தியாசாலையில் ஸ்ரீ க. முத்துக்குமாரு உடையார் அவர்களினதும் ஸ்ரீ இ. நல்லதம்பிஅவர்களினதும் உபசரிப்பினுல் விருந்தளிக்கப்பட்டது. இரண்டரைமணியானதும் கௌரவ ஸ்ரீ வை. துரைசாமி அவர்கள் தலைமையில் மாணவர்கள் ஸ்ரீ கணேச வித்தியாலயத்திலிருந்து வாத்திய சகிதமாய்ப் புறப்பட்டு, விளையாட்டுக் களரியை வலம்வந்து ஸ்ரீ அ. வைத்தியலிங்கம் அவர்களால் அமைக்கப்பெற்றிருந்த தண்ணீர்ப் பந்தரில் நீரருந்தி, பந்தய ஆட்டங்களுக்கு ஆரம்பித்தனர். ஆயிரக்கணக்கான ஜனங்களின் குதூகலமான ஆரவாரத்தினிடையே ஐந்தரை மணிவரையில் ஆட்டங்கள் முடிவுற, வெற்றி பெற்றோர்க்குத் தலைவர் கௌரவ ஸ்ரீ வை. துரைசாமி அவர்களால் பரிசுகள் வழங்கப்பெற்றன. தாட்சி விளையாட்டில் முதன்மைபெற்ற ஸ்ரீ சுப்பிரமணியவித்தியாசாலைக்கு அதற்கென ஸ்ரீ பொ. சின்னத்துரை அவர்களால் உதவப்பெற்ற, விருதுக்கிண்ணம், பரிசளிக்கப்பட்டது. மற்றும் பந்தய ஆட்டத்துக்குரிய விருதுக்கிண்ணம் இரு வித்தியாசாலைகள் சமமாய் இருந்தமையால் ஒன்றுக்குமுதவப் படாது ஸ்ரீ கணேச வித்தியாசாலையின் உபயோகத்துக்குச் சபையாரின் தீர்ப்பின்படி உதவப்பட்டது. பின் அங்கிருந்து வித்தியாசாலையை யடைந்து கௌரவ ஸ்ரீ துரைசாமி அவர்களுக்குச் சங்கத்தின்பேரால் வந்தனேபசாரப் பத்திரம் ஒன்று வாசித் தளிக்கப்பட்டது. அதற்குத் தகுதியான விடை கூறி முடிந்ததும், சமய பாடத்திலும், தேவாரத்திலும் திறமைவாய்ந்த எல்லா வித்தியாசாலை மாணவர்க்கும் பரிசளிக்கப்பட்டு முடிவுற இரவு 7 மணிக்குப் பிரம்மஸ்ரீ நா. சாமிநாதக்குருக்கள் அவர்களின் தலைமையில் வைத்தியர் ஸ்ரீ சி. கணபதிப்பிள்ளை அவர்கள் பௌராணிக மதம் என்னும் விஷயத்தைப் பீடிகையாகக் கொண்டு நீண்டதோர் உபந்நியாசஞ் செய்தனர். அக்கிராசனர் முடிவுரை கூறத் தேவார பாராயணத்துடன் பூர்த்தியாயிற்று.

மூன்றும்நாள் பகல் 10 மணிவரையில் போர்த்தேங்காய்ப் பங்கம் வெகு விமரிசையாக நடந்தேறியது. இரவு 7 மணிக்கு ஸ்ரீ மாணிக்கத் தியாகராசா அவர்களால் "நந்தனர்" சரித்திரம் பக்கவாத்தியசகிதமாய்ப் பிரசங்கஞ் செய்யப்பட்டது, உபகாரியதரிசி ஸ்ரீ க. செல்லத்துரை ஆசிரியரவர்களால், பிரசாரகர்க்கும், சமூகந்தந்தோர்க்கும், சங்கத்திற்குப் பேருதவி புரிந்தவரும் எம்மூர் மலாய்நாட்டுவாசிகட்கும், கொழும்புப் பழைய மாணவர்க்கும் சங்கத்திற்கு உதவிபுரிந்த ஏனையோர்க்கும் வந்தனம் கூறப்பட இரவு 11 மணிவரையில் தேவார பாராயணத்துடன் கூட்டம் சமாப்தியாயிற்று.

இங்ஙனம்,<br>
சீ. ஆறுமுகம்,<br>
கௌரவ காரியதரிசி.

---


## சுப்பிரமண்ய ஜோதிடம்.

இந்தியா தேசமெங்கும் தலைமைபெற்றுப் பிரகாசிக்கும் ஜோதிடாலயம் இதுவே.

உங்கள் அதிஷ்டத்தை ஏன் தெரிந்துகொள்ளக் கூடாது. இன்றே யெழுதி உங்கள் அதிஷ்டத்தைத் தெரிந்துகொள்ளுங்கள்.

உங்கள் எதிர்காலப் பலனைப்பற்றிய 6 கேள்விகளுக்குப்பதில் எழுத ரூபா 1-00. மேல் தனிக் கேள்விகளுக்கு அணு 4. ஒருவருஷப் பலன் எழுத ரூபா 2-00. கடிதம் எழுதும்போது உள்ள நேரத்தையாவது ஜாதகக் குறிப்பையாவது தெரியப்படுத்தவேண்டியது. மற்ற விபரங்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

## சர்வஜய வசீகரணி.

தாயித்தை 1-க்கு ரூபா 2—8—0

இது எல்லாவிதமான காரியங்களிலும் ஜெயம்பெற்று வருவதுமன்றி செய்வினை போய் நல்வினை யுண்டாக்கும். எல்லாவிதமான காரியங்களிலும் அனுகூலப்படும்.

மானேஜர்,<br>
ஸ்ரீ சிவசுப்பிரமணிய ஜோதிட நிலயம்.<br>
(Q 103) திருத்தணி, சித்தூர்ஜில்லா.

---

## விளம்பரம்.

கீழே குறிக்கப்பட்ட முடிக்குரிய காடுகளில் நிற்கும் மரங்கள் கேள்விப்பத்திரங்கள் மூலமாக விற்கப்படும்:--

**திராவில் ஒட்டுசுட்டான் காடு.**

110 பாலைமரங்கள் --2842 கன அடி<br>
26 முதிரை ,, -- 549 ,,<br>
15 பொன்னை முருங்கை-- 366 ,,

**வவுனியாவைச் சேர்ந்த கூளன்குளம்காடு.**

50 முதிரைமரங்கள் -- 803 கன அடி

**டிக்வேவ காடு.**

65 முதிரை மரங்கள் --1512 கன அடி

**மைலன்குளம் காடு.**

301 முதிரைமரங்கள் --7037 கன அடி

**தாண்டிக் குளத்துக்கும் மகா இரம்பைக்குளம் காவல்காட்டு எல்லைக்குமிடையேயுள்ள காடு.**

28முதிரை மரங்கள் --490 கன அடி

ஏனைய விபரங்களை 1928-ம் ௵ ஏப்பிரல்௴ 27௳ வெளி வரும் 7640ம் இலக்கக் கெசற் பத்திரிகையிலுள்ள விளம்பரத்திற் காணலாம்.

J. D. SARGENT,<br>
வனபரிபாலனர்.

வனபரிபாலனர் கந்தோர்,<br>
கண்டி, சித்திரை௴, 17௳, 1928.<br>
G. 892.)

---

## ஸந்தீபன லேகியம்.

:o:

ஓர் புதிய யூனனிமுறை.

**இந்த லேகியத்தை மிகவுஞ் சிரமப்பட்டு அரிய பல மூலிகைகளைக்கொண்டும் ஸாலாமிஸ்ரி, பஞ்சசப்மிஸ்ரி, ஸ[illegible]ருஞ்சான்மிஸ்ரி, போஜிதான்மிஸ்ரி, கீர்முள்ளிவிரை, இஸ்கூல்விரை, விளாம்பிசின், பேதானு முதலிய யூனனி சரக்குகளைக் கொண்டும், நரம்புகளுக்கும் புருஷ ஜனனேந்திரியங்களுக்கும் வலுவைக்கொடுத்துக் கெட்டிப்படுத்தி ஸம்பூர்ணமான சுகத்தை அனுபவிக்கும்படியான சரீர திடத்தைக் கொடுக்குமாறு அரிய முறையாய்ச் செய்யப்பட்டு இருக்கிறது. குணமில்லாவிடில் பணம் வாபீஸ் செய்யப்படும்.**

40 நாள் சாப்பிடக்கூடியது ரூ. 2—0—0.

அஸ்வினி<br>
ஆயுர்வேத வைத்தியசாலை,<br>
துக்காச்சேரி,<br>
கொடவாசல் போஸ்டு,<br>
(M. 62) தஞ்சைஜில்லா.


---

## அடைவு நகை விற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்று அடைவு பிடிக்கும் திரிகோணமலை 6-ம் நெம்பர் காசுக்கடைவீதி மு. தாமோதரம்பிள்ளை & இராசலிங்க மென்பவர்களிடம் அடைவுவைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி ஷை சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்தஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:—

| இல. | உ. | ரூ. | ச. | நகைகளின் விபரம். |
|---|---|---|---|---|
| 1926 ஆ 8-ம் மீ. | | | | |
| K 14 | 1 | 50 | 04 | வைரக்கடுக்கன் சோடி 1 |
| 52 | 4 | 18 | | வெ. சிறு பாதசரம் சோ. 1 |
| 75 | 5 | 10 | | கொப்புச்சிமிக்கி சோடி 1 |
| 98 | 7 | 10 | | பூசாந்திரமுடன் வெ. சினமணி 4 உடையணி 13 |
| 99 | 7 | 10 | | பழைய தண்டை சோடி 1 |
| 100 | 7 | 10 | | அரும்புமணிக்கோர்வை 1ல் மணி 25 குப்பிசோடி 1 |
| 166 | 11 | 16 | | தங்கமோதிரம் 1 |
| 173 | 12 | 14 | | சிறுபாதசரம் சோடி 1 |
| 218 | 15 | 6 | | கொப்புச்சிமிக்கி சோடி 1 |
| 350 | 25 | 53 | | தங்க அரைஞாண் 1 கொடி |
| 9-ம் மீ. | | | | |
| 446 | 4 | 6 | | பொன் தோடு சோடி 1 |
| 477 | 7 | 6 | | சிறு இதட்டு 1 |
| 490 | 9 | 20 | | பாதசரம் சோடி 1 |
| 497 | 9 | 10 | | தங்கமோதிரம் 1 |
| 585 | 18 | 20 | | பூசாந்திரமுடன் மணி 4 சிறுமணி 9 |
| 668 | 26 | 6 | 50 | சிறு கலாவலைமோதிரம் 1 |
| 703 | 30 | 7 | | கூடு 1 கொக்கிலில்லை |
| 712 | 30 | 11 | | தோக்குச்ச சோடி 1 சிறு கூடு 1 வடகுங்லை ஒற்றை |
| 715 | 30 | 40 | | கைச்சங்கிலி 1, க. 1 இ. |
| 10-ம் மீ. | | | | |
| 724 | 1 | 25 | | தங்கக்காப்பு ஒற்றை |
| 744 | 3 | 50 | | தாலிக்கொடி 1 |
| 758 | 4 | 35 | | குங்லை முத்துசோடி 1 தோடு சோடி 1 |
| 789 | 7 | 17 | | சிறு இமிற்தோடு சோடி 1 |
| 795 | 7 | 25 | | கைச்சங்கிலி 1 கல் 1 இல். |
| 809 | 8 | 65 | | ½பவுண் 10கோத்த கிலிற் மணிக்கோர்வை 1 பின் இல்லை |
| 857 | 11 | 6 | | பெட்டிமோதிரம் 1 |
| 899 | 14 | 25 | | மு. வி. டிம்மியுடன் பதக்கம் 1 |
| 903 | 15 | 12 | | தங்கமோதிரம் 1 |
| 913 | 16 | 13 | 54 | பழு பொன் சறடு 1 |
| 973 | 20 | 45 | | பூரானட்டியல் 1 பழுது |
| 987 | 21 | 7 | | வெ. அரைஞாண் 1 |
| 1033 | 25 | 12 | | பழைய மணியட்டியல் 1, சிங்களத்தோடு சோடி 1 |
| 1035 | 25 | 48 | | 1 பட்டிலைமாலை 1 நசி. |
| 1048 | 26 | 12 | | சு. இ. சிறு இமிற்கடுக்கன் சோடி 1 பழு |
| 1051 | 26 | 55 | | பூசாந்திரமுடன் சினமணி 7, வெ. பாதசரம் சோடி 1, வெ. அடுக்குக்காப்புசோடி 1 சு. இ. |
| 1054 | 26 | 6 | | சிறுகொப்புச்சிமிக்கிசோ. 1 பழுது |
| 1084 | 28 | 45 | 79 | பட்டைக்காப்பு சோடி 1 |
| 1100 | 29 | 8 | | வெள்ளி 4பட்டைவல்மாலை 1 சு. இ பழுது |
| 1115 | 30 | 12 | | சிறு பூசாந்திரமுடன் மணி 2, சிறுமணி 12 உடையல் |
| 1119 | 30 | 20 | | மு. இ. பொன்பத பொன் சறடு 1 பழுது |
| 11-ம் மீ. | | | | |
| 1147 | 1 | 23 | | வெ. பாதசரம் சோடி 1 |
| 1149 | 1 | 18 | | கல்விழு. பழு. பத. பொன் பூரானட்டியல் 1 |
| 1159 | 1 | 10 | | வெ. எஸ் கறளை சோடி 1 |
| 1160 | 1 | 9 | 04 | வெ. பழைய எஸ் கறளை சோடி 1 |
| 1237 | 5 | 13 | | வெ. சங்கிலி 1 |
| 1258 | 6 | 8 | 50 | தங்கமோதிரம் 1 கல் இல். |
| 1271 | 7 | 31 | | நசி பொன் தாலிக்கொடி 1 சு. 1 இ. |
| 1278 | 8 | 25 | | பி. இ. மணிக்கோர்வை 1ல் மணி 70 |
| 1298 | 9 | 25 | | பொன் தாலிக்கொடி 1 |
| 1328 | 11 | 10 | | வளையல் 6 |
| 1375 | 14 | 14 | | பொன் தோடு சோடி 1 வளையல் 4 |
| 1390 | 15 | 180 | | ⅓ பவுண் 44 கோர்த்த மாலை 1 |
| 1424 | 16 | 12 | | பழு பொன் சறடு 1 |
| 1432 | 17 | 8 | | கைவிலங்கு 1 வெ. அரைஞாண் 1 |
| 1442 | 17 | 30 | | பூசாந்திரம் பின்னுடன் மணிக்கோர்வை 1 ல் மணி 4 வெ மணி 6 |
| 1443 | 17 | 12 | | கைவிலங்கு 1 |
| 1444 | 17 | 40 | | சிறு பூரானட்டியல் 1 |
| 1492 | 21 | 60 | | சிறு கெட்டிக் கொலிசக் காப்பு சோடி 1 |
| 1501 | 21 | 12 | | சிறுதங்கக் காப்பு சோடி 1 |
| 1503 | 21 | 15 | | பொன் சறடு 1 |
| 1584 | 25 | 9 | | வளையல் 7 |
| 1619 | 27 | 50 | | பழு பொன்தாலிக்கொடி 1 வெ பழைய பாதசரம் சோடி 1 |
| 1641 | 28 | 12 | | தங்கப்பவுண் 1 |
| 1664 | 29 | 140 | | சிங்கமுக்காப்பு சோடி 1 |
| 1676 | 30 | 8 | | கொப்புச்சிமிக்கி சோடி 1 |
| 12-ம் மீ. | | | | |
| 1705 | 1 | 22 | | தங்கக்காப்பு சோடி 1 |
| 1719 | 2 | 20 | | 5 பட்டு மணிக்கோர்வை 1 |
| 1741 | 3 | 15 | | கற்சிமிக்கி சோடி 1 கல் முருகு சோடி 1 |
| 1749 | 4 | 20 | | கம்பி அலுக்குத்து 24 |
| 1750 | 4 | 8 | | வெ. குழற்காப்பு சோடி 1 நசி. |
| 1757 | 4 | 6 | | பழுதான பின் 1 |
| 1758 | 4 | 55 | | கம்பிப்பூரானட்டியல் 1 |
| 1787 | 6 | 10 | | தங்கமோதிரம் 1 |
| 1835 | 8 | 22 | 04 | சிறுதங்கக்காப்பு சோடி 1 |
| 1876 | 11 | 10 | | கொப்புச்சிமிக்கி சோடி 1 |
| 1902 | 12 | 17 | | பழு பதசவுக்கமணிக்கோர்வை 1ல் மணி 29 |
| 1904 | 12 | 41 | | கைச்சங்கிலி 1 |
| 1907 | 12 | 8 | | நசி தோடு சோடி 1, கம்பி சுரை இல்லை |
| 1955 | 15 | 40 | | பொன் தாலிக்கொடி 1 |
| 1972 | 16 | 15 | | பழைய பாதசரம் சோடி 1 |
| 1981 | 16 | 10 | | வளையல் 6 |
| 1992 | 17 | 20 | | சிறு தங்க அரைஞாண் 1 |
| 2001 | 18 | 20 | | வளையல் 8 பழுது |
| 2025 | 20 | 22 | | கல் தோடு சோடி 1 |
| 2027 | 20 | 40 | 04 | பொட்டுப்பிறையுடன் பொன் பின்னைக்கொடி 1 |
| 2038 | 21 | 150 | | மணிக்கோர்வை 1ல் ம. 26 |
| 2062 | 22 | 20 | | கல்மோதிரம் 2 |
| 2072 | 22 | 10 | 04 | கு. வைத்த ½ பவுண் 2 |
| 2123 | 25 | 15 | | வெ. பழைய பாதசரம் விற்சோடி 1 |
| 2162 | 27 | 75 | | செடிக்காப்பு சோ. 1 முறி |
| 2174 | 28 | 12 | | பூசாந்திரம் 1 |
| 2179 | 29 | 9 | | பழுதான தோடு சோடி 1 |
| 2202 | 30 | 32 | 04 | பத பிறையுடன் பொன் திருக்கொன்றை மணிக்கோர்வை 1 |
| 2215 | 31 | 20 | | வெ. பழையபாதசரம்சோ 1 |

விற்பனவு: — விபவ௵ வைகாசி௴ 8௳ திங்கட்கிழமை (21-5-28) காலை 8 மணி தொடக்கம் ஏடுபெட்டாகை பிறகீங்கலாக மிருதி ஷை கடையில் பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

க. கதிர்காமத்தம்பி,<br>
(Mis. 1200) வெந்திஸ்மேஸ்தர்.

---

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க, நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

---

Printed & published by Pandit V. T. Sambandhan for and on behalf of the Proprietors, the Jaffna Saiva Paripalana Sabai, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai.